## ஏப்ரல் - 21 - சனி

### புனித அன்சலம்

**“வாழ்வு தருவது தூய ஆவியே: ஊனியல்பு ஒன்றுக்கும் உதவாது. நான் கூறியவார்த்தைகள் வாழ்வுதரும் ஆவியைக் கொடுக்கின்றன.” யோவா. 6:63**

**முதல் வாசகம் : திருத்தூதர் பணி 9 : 31 – 42**

அந்நாட்களில் யூதேயா, கலிலேயா, சமாரியா ஆகிய பகுதிகளிலெல்லாம் திருச்சபை வளர்ச்சியுற்று, ஆண்டவருக்கு அஞ்சி நடந்து, அமைதியில் திளைத்து, தூய ஆவியாரின் துணையால் பெருகிவந்தது.பேதுரு எல்லா இடங்களுக்கும் சென்று வந்தார் ஒருநாள் லித்தாவில் வாழ்ந்த இறைமக்களிடம் வந்து சேர்ந்தார்.அங்கே அவர் எட்டு ஆண்டுகள் முடக்குவாதத்தால் படுக்கையில் கிடந்த ஐனேயா என்னும் பெயருடைய ஒருவரைக் கண்டார். அவரிடம், ”ஐனேயா, இயேசு கிறிஸ்து உம் பிணியைப் போக்குகிறார் எழுந்து உம் படுக்கையை நீரே சரிப்படுத்தும்” என்று பேதுரு கூறினார். உடனே அவர் எழுந்தார்.லித்தாவிலும் சாரோனிலும் வாழ்ந்து வந்தவர்கள் அனைவரும் அதைக் கண்டு ஆண்டவரிடம் திரும்பினார்கள்.யோப்பா நகரில் தபித்தா என்னும் பெயருடைய பெண் சீடர் ஒருவர் இருந்தார். அவர் தொற்கா என்றும் அழைக்கப்பட்டார் நன்மை செய்வதிலும் இரக்கச் செயல்கள் புரிவதிலும் அவர் முற்றிலும் ஈடுபட்டிருந்தார்.உடல்நலம் குன்றி ஒருநாள் அவர் இறந்துவிட்டார். அங்கிருந்தோர் அவரது உடலைக் குளிப்பாட்டி மேல் மாடியில் கிடத்தியிருந்தனர். யோப்பாவிற்கு அருகிலுள்ள லித்தாவுக்குப் பேதுரு வந்திருப்பதைச் சீடர்கள் கேள்விப்பட்டு இருவரை அவரிடம் அனுப்பி, ”எங்களிடம் உடனே வாருங்கள்” என்று கெஞ்சிக் கேட்டார்கள்.பேதுரு புறப்பட்டு அவர்களோடு வந்தார். வந்ததும் அவர்கள் அவரை மேல்மாடிக்கு அழைத்துச் சென்றார்கள். கைம்பெண்கள் அவரருகில் வந்து நின்று, தொற்கா தங்களோடு இருந்தபோது செய்துகொடுத்த எல்லா அங்கிகளையும் ஆடைகளையும் காண்பித்தவாறே அழுதார்கள்.பேதுரு அனைவரையும் வெளியே அனுப்பிவிட்டு முழந்தாள்படியிட்டு இறைவனிடம் வேண்டினார் அவரது உடலின் பக்கமாகத் திரும்பி, ”தபித்தா, எழுந்திடு” என்றார். உடனே அவர் கண்களைத் திறந்து பேதுருவைக் கண்டு, எழுந்து உட்கார்ந்தார்.பேதுரு அவருடைய கையைப் பிடித்து எழுந்து நிற்கச் செய்தார். இறைமக்களையும் கைம்பெண்களையும் கூப்பிட்டு, அவர்கள் முன் அவரை உயிருடன் நிறுத்தினார்.இது யோப்பா நகர் முழுவதும் தெரிய வரவே ஆண்டவர் மீது பலர் நம்பிக்கை கொண்டனர்.

**பதில்பாடல் :** ஆண்டவர் செய்த நன்மைகளுக்காக என்ன கைம்மாறு செய்வேன்.

**நற்செய்தி : யோவான்6 : 60 – 69**

அக்காலத்தில் இயேசு நிலைவாழ்வு அளிக்கும் உணவுபற்றிக் கூறிக்கொண்டிருந்த போது சீடர் பலர் இதைக் கேட்டு, ”இதை ஏற்றுக் கொள்வது மிகக்கடினம் இப்பேச்சை இன்னும் கேட்டுக்கொண்டிருக்க முடியுமா?” என்று பேசிக் கொண்டனர்.இதுபற்றித் தம் சீடர் முணுமுணுப்பதை இயேசு உணர்ந்து அவர்களிடம், ”நீங்கள் நம்புவதற்கு இது தடையாய் இருக்கிறதா?அப்படியானால் மானிடமகன் தாம் முன்பு இருந்த இடத்திற்கு ஏறிச் செல்வதை நீங்கள் கண்டால் அது உங்களுக்கு எப்படி இருக்கும்?வாழ்வு தருவது தூய ஆவியே ஊனியல்பு ஒன்றுக்கும் உதவாது. நான் கூறிய வார்த்தைகள் வாழ்வுதரும் ஆவியைக் கொடுக்கின்றன.அப்படியிருந்தும் உங்களுள் சிலர் என்னை நம்பவில்லை” என்றார். நம்பாதோர் யார், யார் என்பதும் தம்மைக் காட்டிக்கொடுக்கவிருப்பவன் யார் என்பதும் இயேசுவுக்குத் தொடக்கத்திலிருந்தே தெரிந்திருந்தது.மேலும் அவர், ”இதன் காரணமாகத்தான் “என் தந்தை அருள் கூர்ந்தால் அன்றி யாரும் என்னிடம் வர இயலாது” என்று உங்களுக்குக் கூறினேன்” என்றார்.அன்றே இயேசுவின் சீடருள் பலர் அவரை விட்டு விலகினர். அன்று முதல் அவர்கள் அவரோடு சேர்ந்து செல்லவில்லை.இயேசு பன்னிரு சீடரிடம், ”நீங்களும் போய்விட நினைக்கிறீர்களா?” என்று கேட்டார்.சீமோன் பேதுரு மறுமொழியாக, ”ஆண்டவரே நாங்கள் யாரிடம் போவோம்? நிலைவாழ்வு அளிக்கும் வார்த்தைகள் உம்மிடம்தானே உள்ளன.நீரே கடவுளுக்கு அர்ப்பணமானவர் என்பதை நாங்கள் அறிந்து கொண்டோம். அதை நம்புகிறோம்” என்றார்.

**தியானம்:** “இறைவனின் வார்த்தை உயிருள்ளது: ஆற்றல் மிகுந்தது. ஆவியில் மலர்ந்தது: நல் வழி தருவது: இதயத்தைஅறிவது.” இறைவனின் வார்த்தையே இறைமகன் என்பதை, தந்தையாம் இறைவனின் சித்தத்தைப் பழுவின்றி நிறைவேற்றியமையால் அவர் மகன் இயேசு எண்பித்துக் காட்டினார். தமது வார்த்தையை வாழ்வாக்கி வாழ்வோருக்குத் தூய ஆவியையும் அவரே வாக்களித்தார். நோயாளிகளைக் குணமாக்கவும், இறந்தோரை உயிர்ப்பிக்கவும் வல்லமை தூய ஆவியாரே அருளுகின்றார். படைப்பின் தந்தையும், மீட்பின் மகனும், இவ்விருவரிடையேயும் இருந்து புறப்படும் தூய ஆவியும் ‘ஒரேகடவுள்” என நம் விசுவாச அறிக்கையில் நாம் அறிக்கையிடுகின்றோம். எனவே, இறைவனின் வார்த்தையைக் கடைப்பிடிக்காமல் தூய ஆவியின் செயற்பாடுகள் இல்லை. இவர் போதனையைக் கேட்டுக் கொண்டிருந்த “இயேசுவின் சீடருள் பலர் அவரை விட்டுவிலகினர். அன்று முதல் அவர்கள் அவரோடு சேர்ந்து செல்லவில்லை.”இயேசுவின் வார்த்தைகளை இவ்வுலகப் பாணியில் சிந்தித்துச் செயலாற்றிய யூதாஸ் தீய ஆவியினால் வழி நடாத்தப்பட்டு அவரைக் காட்டிக் கொடுக்கும் அளவுக்கு அவன் மனதைக் கடினப்படுத்தியது என அறிவோம். இன்று ஆவியின் பெயரால் பல நிகழ்வுகளை காணும் நாம், எவை தூய ஆவியின் செயற்பாடுகள் என அறிந்து கௌ்வதற்கு “இறைவார்த்தை” என்னும் ஒரே அளவு கோலையே பயன்படுத்துவோம். அவைவெறும் வார்த்தைகளாய் மட்டும் அல்லாமல் வாழ்க்கையிலும் கடைப்பிடிக்கப்படும் போது இறைமகன் இயேசுவாக்களித்த தூய ஆவி நம்மீது நிறைவாகப் பொழியப்படும் என்பதை விசுவசிப்போமாக!